**<u>முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திட்டக்குடி.</u>**

**முன்னிலை: திருமதி. B. ஹரிணிபிரியா, B.A., L.L.B.,(Hons).,**

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி, திட்டக்குடி.

**2026 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 09ஆம் நாள் திங்கள் கிழமை**

**அசல் வழக்கு எண்.7/2016.ல்**

**வழக்கிடை மனு எண்.6/2026**

சிவராமகிருஷ்ணன் ... மனுதாரர்/வாதி

.. எதிர் ..

1.கோவிந்தராஜீலு

2.ஸ்ரீதர்

3.தனபால் (இறந்தார்)

4.சுப்பையா

5.ஜெயா

6.தனலெட்சுமி

7.சரோஜா (இறந்தார்) பை வாரிசுகள் 9, 10 எதிர்மனுதாரர்கள்

8.இணை ஆணையர், இந்து சமய அறநிலையத்துறை, விழுப்புரம்

9.சுமதி

10.சாந்தி

11.முத்துலெஷ்மி

12.வேல்முருகன் ... எதிர்மனுதார்கள்/பிரதிவாதிகள்

இம்மனுவானது 14.11.2025ஆம் தேதியன்று தாக்கல் செய்யப்பட்டு 09.01.2026ஆம் தேதியன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டது. மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.எம்.காமராசு அவர்கள் முன்னிலையாகியும், 1, 4, 7ம் எதிர்மனுதாரர்கள் /எதிர்வாதிகள் இறந்துவிட்டதால் அவர்களை நீக்கரவுச்செய்யப்பட்டும், 2, 5, 9, 10 எதிர்மனுதாரர்கள் / எதிர்வாதிகள் அசல் வழக்கிலேயே

தோன்றாதரப்பினராகப்பட்டுள்ளார்கள். 11, 12 எதிர்மனுதாரர்கள் தரப்பில் இந்நீதிமன்றத்தால் அழைத்தும் முன்னிலையாகாததால் தோன்றாதரப்பினராக்கப்பட்டுள்ளார்கள். 6வது எதிர்மனுதாரர் / எதிர்வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.செந்தில்சரவணன் என்பவர் கடந்த 06.02.2026ஆம் தேதியன்று எதிருரை தாக்கல் இல்லை என்று ஒப்புதல் அறித்துள்ளார். இம்மனு 06.02.2026ஆம் தேதியன்று இறுதி விசாரணைக்காக வந்தபோது மனு, மனுதாரர் தரப்பு வாதங்கள் மற்றும் கிடைக்கப் பெற்ற ஆவணங்கள் ஆகியன பரிசீலனை செய்தும், இதுநாள் வரை என் சீரிய ஆய்விலிருந்து வரும் இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு வழங்கும்...

**உத்தரவு**

இம்மனுவில் கண்டுள்ள காரணங்களுக்காக இந்நீதிமன்றத்தார் அவர்கள் இம்மனுவை ஏற்று, 3வது எதிர்மனுதாரர் இறந்த தனபால் வாரிசுதாரர்களை அசல் மனுவில் 11 மற்றும் 12 பிரதிவாதிகளாக சேர்த்து வழக்கை மேல் நடத்த உத்தரவிட வேண்டி, உரிமையியல் நடைமுறைச்சட்டம் பிரிவு 5ன் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. மனுவின் சுருக்கம்**

**2.1** மனுவில் மனுதாரர் அசல் வழக்கில் வாதி என்றும் மேற்படி வழக்கில் தான் எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளதாகவும், மேற்படி வழக்கு விசாரணைக்கு வாய்தா உள்ளது என்றும் இந்த வழக்கு நிலுவையில் இருக்கையில் 3வது பிரதிவாதி தனபால் கடந்த 27.12.2022ல் இறந்துவிட்ட விபரம் தனக்கு தற்போதுதான் தெரியவந்தது என்றும் 3வது பிரதிவாதி தனபாலுவிற்கு முத்துலெஷ்மி என்ற மனைவியும், வேல்முருகன் என்ற மகனும் வாரிசுகளாவார்கள்,

அதனால் 3வது பிரதிவாதி தனபாலுவின் வாரிசுதாரர்களை அசல் வழக்கில் 11 மற்றும் 12 பிரதிவாதிகளாக சேர்க்க மேற்படி இறந்த 3வது பிரதிவாதி தனபாலுக்கு 90 நாட்களில் வாரிசு மனு தாக்கல் செய்ய வேண்டும். 3வது பிரதிவாத தனபால் இறந்த விபரம் தனக்கு தற்போதுதான் தெரியவந்ததால், உடன் காலத்தில் வாரிசு மனு தாக்கல் செய்யவில்லை, தான் வேண்டுமென்றோ அலட்சியமாகவோ இருக்கவில்லை என்றும் அதனால் நாட்கள் கழித்து காலதாதமாக தாக்கல் செய்யும் வாரிசு மனுவை ஏற்றுக்கொள்ள வேண்டியது அவசியமாகவும், நியாயமாகவும் இருக்கிறது. இல்லையேல் தனக்கு ஈடுசெய்ய முடியாத கஷ்டமும் நஷ்டமும் ஏற்படும்.

**2.2** ஆகவே இந்நீதிமன்றத்தார் அவர்கள் இம்மனுவை ஏற்று, தெய்வாதினமாக ஏற்பட்ட செயலை மன்னித்து, 27.12.2022ல் இறந்த 3வது பிரதிவாதி தனபாலுக்கு வாரிசு மனு தாக்கல் செய்ய ஏற்பட்ட 903 நாட்கள் காலதாமதத்தை மன்னித்து, மேற்படி வாரிசு மனுவை ஏற்றுக்கொள்ள அனுமதியளித்து உத்திரவிட வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3.** 1, 4, 7ம் எதிர்மனுதாரர்கள் /எதிர்வாதிகள் இறந்துவிட்டதால் அவர்களை நீக்கரவுச்செய்யப்பட்டும், 2, 5, 9, 10 எதிர்மனுதாரர்கள் / எதிர்வாதிகள் அசல் வழக்கிலேயே தோன்றாதரப்பினராகப்பட்டுள்ளார்கள். 11, 12 எதிர்மனுதாரர்கள் தரப்பில் இந்நீதிமன்றத்தால் அழைத்தும் முன்னிலையாகாததால் தோன்றாதரப்பினராக்கப்பட்டுள்ளார்கள். 6வது எதிர்மனுதாரர் / எதிர்வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.செந்தில்சரவணன் என்பவர் கடந்த 06.02.2026ஆம் தேதியன்று எதிருரை தாக்கல் இல்லை என்று ஒப்புதல் அறித்துள்ளார்.

**4.** மனுதாரர் தரப்பு வாதம் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டன.

5. **இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை என்னவெனில் இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதே.**

5.1 மனுதாரர் தரப்பு வாதம் என்னவெனில் வழக்கு நிலுவையில் இருக்கையில் 3வது பிரதிவாதி தனபால் கடந்த 27.12.2022ல் இறந்துவிட்ட விபரம் தனக்கு தற்போதுதான் தெரியவந்தது என்றும் 3வது பிரதிவாதி தனபாலுவிற்கு முத்துலெஷ்மி என்ற மனைவியும், வேல்முருகன் என்ற மகனும் வாரிசுகளாவார்கள், அதனால் 3வது பிரதிவாதி தனபாலுவின் வாரிசுதாரர்களை அசல் வழக்கில் 11 மற்றும் 12 பிரதிவாதிகளாக சேர்க்க மேற்படி இறந்த 3வது பிரதிவாதி தனபாலுக்கு 90 நாட்களில் வாரிசு மனு தாக்கல் செய்ய வேண்டும். 3வது பிரதிவாதி தனபால் இறந்த விபரம் தனக்கு தற்போதுதான் தெரியவந்ததால், உடன் காலத்தில் வாரிசு மனு தாக்கல் செய்யவில்லை, தான் வேண்டுமென்றோ அலட்சியமாகவோ இருக்கவில்லை என்று வாதிடப்பட்டுள்ளது.

6. இந்நிலையில் மாண்புமிகு பாம்பே உயர் நீதிமன்றம் ***Mr.V.B.Garud Vs Mr.A.R.Devakate.,*** என்ற வழக்கில்

> ***'Limitation Act (1963), S.5- Condonation of delay - delay of 2074 days in filing application for bringing LRs on record and setting aside abatement of second appeal - Delay occurred as LRs of appellant were not having knowledge of filing of second appeal - Delay occurred as LRs of appellant were not having knowledge of filling of second appeal - wife of appellant was illiterate and his kids were minor at time of filing second appeal - Application for bringing LRs was filed immediately on getting knowledge of abatement of appeal - Sufficient cause for delay - Delay in filing application condoned by imposing cost Rs.5,000/-. 1996(10) SCC 253 Rel.on (paras 12, 20, 22, 25, 27 )***

என்று வழங்கிய முன் தீரப்பினை இங்கு குறிப்பிடுவது பொருத்தமானதாக இருக்கும் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

7. எனவே இருதரப்பினரையும் விசாரித்து சாட்சியம் மற்றும் சட்டத்தின் அடிப்படையில் தீர்வு காண்பதே நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என்பதாலும் மனுதாரர்/ வாதிக்கு தமது வழக்கை எடுத்துரைக்க ஒரு வாய்ப்பினை அளிப்பது சட்டம்

மற்றும் இயற்கை நீதிக்கோட்பாடுகளின்படி சரியானதாக இருக்கும் என்பதாலும், கால வரையறை சட்டம் பிரிவு 5ன் கீழ் தாக்கல் செய்த இம்மனுவை செலவுத் தொகையின்றி அனுமதிக்க இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது.

8. **இறுதி முடிவு**

இம்மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தரிடம் சொல்லப்பட்டு அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2026ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 09ஆம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

**(ஓம்.B. ஹரிணிபிரியா )**

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திட்டக்குடி.

மனுதாரர் தரப்பில் சாட்சி மற்றும் சான்றாவணங்கள் : இல்லை
எதிர்மனுதாரர் தரப்பில் சாட்சி மற்றும் சான்றாவணங்கள் :இல்லை

**(ஓம்.B. ஹரிணிபிரியா )**

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திட்டக்குடி.